## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
### வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
### திருப்பூர்மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
### (26.10.2022முதல் 30.10.2022 )

**அறிக்கைஎண் 085/2022** **தேதி.25.10.2022**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 9°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 21.10.22 முதல் 24.10.22 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3-11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (21.10.2022 முதல் 24.10.2022) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 30.10.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/10 | 22/10 | 23/10 | 24/10 | தேதி | நாள்-1 26/10 | நாள்-2 27/10 | நாள்-3 28/10 | நாள்-4 29/10 | நாள்-5 30/10 |
| 40.8 | 3.7 | 0.3 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 0 | 2 | 20 |
| 32 | 31 | 32 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 32 | 32 | 31 |
| 21 | 22 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 20 | 20 | 20 | 21 | 21 |
| 7 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 3 | 3 | 4 | 6 |
| 90 | 74 | 84 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 75 | 75 |
| 74 | 45 | 69 | 67 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 55 | 60 | 55 | 65 | 65 |
| 3 | 8 | 11 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 90 | 90 | 230 | 200 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 340 | 340 | 320 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (26.102022 முதல் 30.10.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலானமேக மூட்டத்துடன் காணப்படும். 27.10.22, 29.10.22 மற்றும் 30.10.22 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின்

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர்மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 26-10-2022 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.3 | 0.3 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 27-10-2022 | 0.3 | 0.0 | 0.0 | 0.5 | 0.4 | 0.0 | 0.1 | 0.6 | 0.8 | 0.7 | 0.0 | 0.5 | 0.2 |
| 28-10-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 29-10-2022 | 3.2 | 0.0 | 0.0 | 1.0 | 0.4 | 0.0 | 0.0 | 3.8 | 3.3 | 4.3 | 0.0 | 2.9 | 2.9 |
| 30-10-2022 | 13.0 | 5.0 | 2.9 | 10.0 | 12.3 | 0.4 | 2.1 | 30.2 | 27.0 | 19.9 | 0.4 | 15.7 | 3.1 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட (அ) தூறல் மழையுடன் காற்றின் வேகம் 4 - 6 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் மழையில்லா நேரங்களில் உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை மேற்கொள்ளலாம். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | 25 நாட்கள் வயதுடைய இறவை மக்காச்சோள பயிருக்கு எக்டருக்கு 68 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவும். மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும். |
| பயறு | வளர் | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கிளைகள் வளர வாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டி விடவும். |
| பருத்தி | விதைப்பு | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் பருத்தியில் இலை சிவப்பு ஆவதை தடுப்பதற்கு வறண்ட வானிலையில் 5 சத மாங்னிசீயம் சல்பேட், யூரியா 1 சதம் மற்றும் சிங்சல்பேட் 0.1 சதம் கலந்து பருத்தி விதைத்த 50 மற்றும் 80-வது நாள் தெளிக்கவும்.<br>வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் இறவை குளிர்கால கம்போடியா பருத்திக்கு எக்டருக்கு 40 கிலோ தழைசத்து மற்றும் 40 கிலோ சாம்பல்சத்தும் இடவும், தொடர்ந்து மண் அணைக்கவும். |
| மாமரம் | | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் மாமரத்தின் அதிக தழை வளர்ச்சியை கட்டுப்படுத்த 1 சதம் பொட்டாசியம் நைட்ரேட் அல்லது பேக்குளோபூட்ரசேல் என்ற மருந்தை ஒரு மரத்திற்கு 10 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| கொடி வகை காய்கறிகள் | பூக்கும் பருவம் | கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் பூக்கும் பருவத்தில் உள்ள கொடி வகை காய்கறிகளில் அதிக தழை வளர்ச்சி காணப்படும். இதனால் பூ பிடித்தலை அதிகரிக்க எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை பீர்க்கங்காய் தவிர மற்ற எல்லா கொடி வகைப் பயிர்களுக்கும் தெளிக்கவும். இதை இரண்டு முறை ஒரு வார இடைவெளியில் தெளிக்கவும். |
| கால்நடைகள் | | மழை காலங்களில் கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் அதற்கு தடுப்பூசி போடவும்.<br>நீரினால் ஏற்படும் நோய்களை தவிர்க்க கால்நடைகள் வெளியில் தேங்கியுள்ள தண்ணீர் அருந்துவதை தவிர்த்து போதிய அளவு சுத்தமான குடிநீரினை கால்நடைகளுக்கு வழங்கவும். |

**குறுஞ்செய்தி**

- கடந்த வாரம் வரையிலான தொடர் மழையினால் மாமரத்தில் அதிக தழை வளர்ச்சியை கட்டுப்படுத்த **1** சதம் பொட்டாசியம் நைட்ரேட் தெளிக்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**